# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

# 2018 - 2019

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 5

சுட்டெண்:.............................................................. நேரம்: 150 மணித்துளிகள்

**1) பொருத்தமான விடைமையக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. ஆடற்கலையை அந்நாளில் ____________ என அழைத்தனர்.

( பரதம், நாட்டியம், கூத்து )

2. மாட்டுப் பொங்கலை ____________ என்றும் கூறுவர்.

(பட்டிப்பொங்கல், போகிப்பொங்கல், உழவர்பொங்கல்)

3. "கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றும்"

இப்பாடல் வரியில் கேண்மை என்பது ____________ .

( அன்பு, நட்பு, சினம்)

4. ஆடற்குலப் பெண்களை ____________ என்பர்.

( பாங்கியர், கூத்தர், விறலியர் )

5. ஆனிரை என்பது ____________ கூட்டம்.

( குதிரைகளின், ஆடுகளின், மாடுகளின் )

6. கற்பகதரு எனப்படுவது ____________.

( பனை, தென்னை, கமுகு )

7. பொதுமறை என அழைக்கப்படும் நூல் ____________ .

( தொல்காப்பியம், திருக்குறள், நல்வழி )

8. கடற்றொழில் ____________ நிலத்திற்குரிய தொழிலாகும்.

( நெய்தல், குறிஞ்சி, முல்லை )

9. தஞ்சைப்பெருங்கோவில் கோபுரத்தின் உயரம் ______________.

( 216அடி, 116அடி, 212அடி )

10. கணிகன் என்ற சொல் குறிப்பது ______________________.

( புலவனை, மருத்துவனை, சோதிடனை )

11. வளவன் ____________________ பாம்பைக் கண்டு நடுங்கினான்.

( முழங்கிய, கத்திய, சீறிய )

12. **குறள்:** செயற்கரிய செய்வார் பெரியர் ________________

செயற்கரிய செய்கலா தார்

(பெரியர், சிறியர், கயவர் )

13. **பழமொழி:** தை பிறந்தால் வழி __________________ .

( பிறக்கும், தெரியும், நிற்கும் )

14. நாம் __________________ நட்புக் கொள்ள வேண்டும்.

( தீயவருடன், நல்லவருடன், அறியாதவருடன் )

15. செங்குட்டுவன் ________________________ மன்னன்.

( சோழ, சேர, பாண்டிய)

16. குறிஞ்சி நில மக்கள் ______________ என அழைக்கப்படுவர்.

( குறவர், பரதவர், மீனவர் )

17. மேசையின் விரிப்பில் ____________________ படிந்திருந்தது.

( கரை, கறை, களை )

18. குயவனால் பானை ______________.
( வனையப்பட்டது, செதுக்கப்பட்டது, நெய்யப்பட்டது )

19. தமிழ்+பாட்டு என்பதைச் சேர்த்து எழுதினால் ______________.
( தமிழ்பாட்டு, தமிழ்ப்பாட்டு, தமிழ்ற்பாட்டு )

20 மல்லிகைப்பூ ______________ என மணம் வீசியது.
( கமகம, மடமட, கிறுகிறு)

21. ஒன்று திரண்டால் வலிமை பெறும் கொடி ______________ .
(அடம்பன், மல்லிகை, முல்லை)

22. அவர்கள் விரைவாக ______________.
( நடந்தனர், நடந்தன, நடந்தநர் )

23. எமக்கு மழை ______________ கிடைக்கிறது.
( கதிரவனால், கதிரவனுக்கு, கதிரவனை )

24. ஆறுமுகநாவலர் பிறந்த ஊர் ______________ .
( நல்லூர், நவாலி, சுன்னாகம் )

25. ______________ என்றும் பெற்றோருக்கு உதவி செய்.
( நீ, நான், அவன்)

26. நட்புப் பற்றி வள்ளுவர் கூறிய குறட்பாக்கள் ______________.
(133, 80, 50)

27. மாடுகள் கட்டும் இடம் ____________.

(பந்தி, தொழுவம், குடில்)

28. சித்தன்ன வாசலில் ____________ மன்னர்களால் வரையப்பட்ட சிறந்த ஓவியங்கள் உள்ளன.

(சேர, சோழ, பல்லவ)

29. எறும்புகள் ____________ ஊர்ந்து செல்லும்.

(கண்ணும்கருத்துமாக, சாரிசாரியாக, சலசலவாக)

30. தமிழர்கள் கலைகளில் சிறந்து விளங்கினர். ____________ கலைகளை அறுபத்துநான்காக வகுத்தனர்.

(அவை, அது, அவர்கள் )

புள்ளிகள் 30

**2) அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.**

1. வன்னிமக்கள் ________________ துன்பப்படுகின்றனர்.

(வறுமை)

2. அதியர்மான் ________________ நெல்லிக்கனியைக் கொடுத்தான்.

(ஔவையார்)

3. மாவீரர் நாளில் ________________ வணங்குவோம்.

(மாவீரர்கள்)

4. மக்கள் காய்கறிகளை ________________ வாங்குவர்.

(அங்காடி)

5. ________________ பல பயன்களைப் பெறலாம்.

(பனை)

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. "இனி நான் துறவி; தமிழே என் துணை"எனக்கூறியவர் யார்?

2. "ஆற்றங்கரையில் மரமும்" எனத்தொடங்கும் பாடல் இடம் பெற்ற நூல் எது?
   இதில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள தொழில் யாது?

3. சொற்பொருள் தருக.

| | | | |
|---|---|---|---|
| காலித்தல் | ____________ | வண்ணம் | ____________ |
| இரை | ____________ | நகுதல் | ____________ |

4. தமிழகத்திலேயே மிகப்பெரிய சிவலிங்கம் அமைந்துள்ள கோவில் எது?

5. பாலை நிலம் எவ்வாறு தோன்றியது?

6 பழந்தமிழர் தாம் வாழும் நிலத்தை எத்தனையாக வகுத்தனர்? அவை எவை?

7. "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்பது எமக்கு எதை உணர்த்துகின்றது?

புள்ளிகள் 10

4) **கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதி, கவிதையை நிரப்புக.**

## அன்புப்பாட்டி

| | | | | |
|---|---|---|---|---|
| மண்ணில் | கதைகள் | ஆத்தி சூடி | கழுவும் | பாட |

*அன்பு நிறைந்த பாட்டி என்னை*

*அணைத்துத் தூக்கும் பாட்டி*

*இன்பமான ________________ எல்லாம்*

*எனக்குச் சொல்லும் பாட்டி*

*துள்ளிக்குதித்து ________________ வீழ்ந்தால்*

*துடைத்துக் ________________ பாட்டி*

*ஔவைப் பாட்டி பாடித்தந்த*

*________________ ப் பாட்டை*

*செம்மையாகப் ________________ ச் சொல்லிச்*

*சிந்தை மகிழும் பாட்டி*

புள்ளிகள் 10

5) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| வியர்வை | தூய்மையாக | உடலுக்குள் |
| கண்களால் | துளைகள் | |

எங்கள் உடல் முழுவதும் தோலால் போர்க்கப்பட்டிருக்கிறது. கிருமிகளும் பிற பொருள்களும் ________________ செல்லாது தடுப்பது தோல் ஆகும். தொடு உணர்வுக்குத் தோலே காரணம். தோலின் மேற்பகுதியில் பல ஆயிரக்கணக்கான ________________ உள்ளன. இவற்றைக் ________________ பார்க்க முடியாது. இத்துளைகள் உடலிலுள்ள வியர்வையை வெளியேற்றுகிறது. உடலில் அழுக்குப்படிவதால் ________________ த் துளைகள் அடைக்கப்படுகின்றன. வியர்வை வெளியேறாவிட்டால் எமக்கு நோய்கள் உண்டாகும். எனவே, நாம் குளித்துத் ________________ இருத்தல் வேண்டும்.

புள்ளிகள் 10

**6) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

முகிலன் பள்ளியிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தான். அவ்வேளை முதியவர் ஒருவர் வீதியோரமாக நடந்து வந்துகொண்டிருந்தார். எதிரே வந்து கொண்டிருந்த சிற்றுந்து அவர் மீது மோதியது. முதியவர் தெருவில் தூக்கி வீசப்பட்டார். அவரது தலையில் பலத்த அடிபட்டது. அதிலிருந்து குருதி ஓடியது. முதியவர் மயங்கி விட்டார். அவரை மோதிய சிற்றுந்தோ நிற்காது ஓடி மறைந்து விட்டது. இதைக் கண்ட முகிலன் மளமளவென சிற்றுந்தின் எண்களைக் குறித்துக் கொண்டான். அவன் வீதியில் நின்ற மக்களின் உதவியுடன் முதியவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றான். முகிலன் சிற்றுந்தின் எண்களைக் காவல் நிலையத்தில் கொடுத்தான்.

1. முகிலன் எங்கிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தான்?

___

___

2. வீதியோரமாக நடந்து வந்தவர் யார்?

___

3. முதியவர் எங்கே தூக்கி வீசப்பட்டார்?

___

4. முகிலன் முதியவரை எங்கே கொண்டு சென்றான்?

___

5. முகிலன் காவல் நிலையத்தில் எதைக் கொடுத்தான் ?

___

___

புள்ளிகள் 10

**7) பந்தியை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

நான் எனது பெற்றோருடன் கோடை விடுமுறைக்கு விண்ணுந்தில் தாயகம் சென்றேன். அங்கு எனது அம்மம்மாவின் வீட்டில் தங்கினோம். தாயகத்து உறவுகளைக் கண்டு மகிழ்ந்தோம். ஒரு நாள் நண்பனோடு கீரிமலைக் கடலுக்குச் சென்று குளித்தேன். மறுநாள் நாங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள நூலகத்திற்குச் சென்றோம். தாயகத்தில் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன்.

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- **தமிழர் கலைத்திறன்**
- **குறள் கூறும் நட்பு**
- **பறவைகள்**

◈ *பறவைகளின் பெயர்கள் வீட்டில் வளர்க்கும் பறவைகள்.*
◈ *அவை வாழும் இடங்களும் உணவுகளும்*
◈ *நீர் விரும்பும் பறவை எது? ஏன்?*

புள்ளிகள் 15